நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மேலூர்

முன்னிலை: செல்வி.த.தென்றல் முத்து, எல்.எல்.எம்.,

நீதித்துறை நடுவர், மேலூர்

**2026** ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் **21-**ஆம் நாள் வெள்ளிக்கிழமை

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.**148/2015**

**CNR.No. : TNMD16-000454-2015**

**…**

| | | |
|---|---|---|
| குற்றம் முறையிடுபவர் | : | அரசுக்காக சார்பு ஆய்வாளர்<br>மேலூர் காவல்நிலையம்<br>குற்ற எண்.147/2005 |
| குற்றம் சாட்டப்பட்டவர்கள் | : | 1) சண்முகம், (39/2026) **(A2)**<br>த/பெ.சுப்பிரமணி,<br>டோபி காலனி, புதூர், மதுரை.<br><br>2) அருள் (எ) செபஸ்தியன்,<br>த/பெ.ஆரோக்கியசாமி,<br>டோபி காலனி, புதூர், மதுரை. **(A3)**<br><br>**(**இந்த வழக்கில் **1-**ம் எதிரி கலையரசி என்பவருக்கு எதிராக வழக்கு சி.சி.எண்.**120/2006** ஆக தனியாக பிரிக்கப்பட்டு முடிக்கப்பட்டது.**)** |
| குற்றம் முறையிடப்பட்டது | : | 2, 3 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 341, 323. |
| குற்றம் வனையப்பட்டது | : | 2, 3 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 341, 323-ன் கீழ் குற்ற முகாந்திரம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. |
| எதிரிகள் காவலுக்கு உட்படுத்தப்பட்டநாள் | : | 30.12.2005 |
| இறுதி அறிக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த நாள் | : | 13.02.2006 |
| பல்வகை மனு மற்றும் அதன் முடிவு | : | 1) U/s.70(2) Cr.P.C = Allowed.<br><br>2) U/s.311 Cr.P.C in Crl.M.P.No.690 of 2007 = Allowed. |



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.21 07:49:41 +0530

| | | |
|---|---|---|
| | | 3) U/s.70(2) Warrant Recall = Allowed.<br><br>4) U/s.70(2) Warrant Recall in Crl.M.P.No.5138 of 2007 = Allowed. |
| முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை நாள் | : | (see table below) |

| | Chief | Cross |
|---|---|---|
| PW1 | 20.01.2007 | 20.01.2007 |
| PW2 | 20.01.2007 | 23.01.2007 |
| PW3 | 17.12.2007 | 17.12.2007 |
| PW4 | 17.12.2007 | 17.12.2007 |
| PW5 | 24.01.2008 | 24.01.2008 |
| PW6 | 22.05.2008 | 22.05.2008 |
| PW7 | 01.01.2010 | 01.01.2010 |
| PW8 | 01.06.2026 | 01.06.2026 |
| PW9 | 03.07.2026 | 03.07.2026 |

| | | |
|---|---|---|
| குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 313(1) (ஆ)-ன் கீழ் எதிரிகளை விசாரித்த நாள் | : | 09.07.2026 |
| தலைமறைவான எதிரியின் விபரம் மற்றும் ஆஜர் செய்யப்பட்ட விபரம் | : | A2 : 14.02.2014 to 12.05.2026 |
| மேல் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை மற்றும் அதன் முடிவு விபரம் | : | Nil |
| தீர்மானம் | : | 2, 3 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 341, 323-ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று தீர்மானம். |
| தீர்ப்பு | : | முடிவாக, 2, 3 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 341, 323-ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து 2, 3 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 341, 323-ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து, குவிமுச பிரிவு 255(1)-ன் கீழ் |



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.21 07:49:52 +0530

எதிரியை விடுதலை செய்து, இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை. மேலும் எதிரி கு.வி.மு.ச பிரிவு 437(A)-ன் கீழ் எழுதிக்கொடுத்துள்ள பிணைப்பத்திரம் 6 மாதங்கள் முடிவடைந்த பின்பு தானாக ரத்தாகிவிடும்.

இவ்வழக்கானது கடந்த 13.03.2006-ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 21.08.2026 அன்று என் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்த போது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை-1 அவர்கள் ஆஜராகியும், 2, 3 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.ராஜசேகரன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், சாட்சி மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**தீர்ப்புரை :-**

2, 3 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 341, 323-ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டுள்ளன.

**1) குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம் :**

இவ்வழக்கின் வாதி நாகூர் என்பவரின் மனைவி இரத்தினாபேகம் என்பவர் 1-ம் எதிரியின் வீட்டில் உள்ள கருவேப்பிலையை உருவி விட்டதாக 1-ம் எதிரி வாதியின் மனைவியிடம் தகராறு செய்து வந்து உள்ளார். இந்நிலையில் கடந்த 25.12.2005-ம் தேதி மாலை 6.00 மணியளவில் வாதி நாகூர், அவரது மனைவி இரத்தினாபேகம் மற்றும் குழந்தைகளுடன் வீட்டுக்கு எதிரே இருந்தபோது எதிரிகள் கையில் கம்புடன் வந்து, 1-ம் எதிரி கம்பால் சாட்சி-2ஐ தலையில் அடித்து தலையின் பின்புறம் சாதாரண காயத்தை ஏற்படுத்தியும், தடுக்கப்போன வாதியை 2, 3 எதிரிகள் மறித்து கம்பால் இடது ஆள் காட்டி விரலில் அடித்து காயத்தை ஏற்படுத்திய குற்றம் புரிந்துள்ளார்கள் என்று மேலூர் காவல் நிலைய ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.21 07:49:55 +0530

**2)** இவ்வழக்கு ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.148/2015-ஆக இந்நீதிமன்ற கோப்புக்கு எடுக்கப்பட்டு இவ்வழக்கின் எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. இவ்வழக்கின் எதிரிகள் அழைப்பாணையின் பேரில் நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் குவிமுச பிரிவு 207-ன் கீழான எதிரிகளுக்கு வழக்கு ஆவணங்கள் அனைத்தும் இலவசமாக வழங்கி, போதிய அவகாசம் கொடுத்து, 2, 3 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 341, 323-ன் கீழ் குற்ற முகாந்திரம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. மேற்படி குற்ற முகாந்திரத்திற்கு போதிய முகாந்திரம் இருந்ததால் 04.12.2006 அன்று எதிரிகள் மீது குற்ற முகாந்திரம் எடுத்துரைத்து தமிழில் வாசித்து விளக்கி கேட்டபோது எதிரி குற்றத்தை மறுத்துரைத்துள்ளார். எனவே வழக்கு அரசு தரப்பு சாட்சிக்காக ஒத்திவைக்கப்பட்டது.

**3)** அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.9 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் சான்று பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை. வழக்கு விசாரணையின் போது, அ.சா.1-ன் மூலம் அ.சா.ஆ.1-ம், அ.சா.4-ன் மூலம் அ.சா.ஆ.2-ம், அ.சா.6-ன் மூலம் அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4-ம், அ.சா.8-ன் மூலம் அ.சா.ஆ.5 முதல் அ.சா.ஆ.7 வரையிலான ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. 2, 3 எதிரிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**4) அரசு தரப்பில் சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து தெரியவரும் வழக்கின் சுருக்கம் :-**

**4.1)** அ.சா.1 நாகூர் தனது சாட்சியத்தில் தான் திருவாதவூர் சமத்துவபுரத்திரல் குடியிருக்கிறேன் என்றும், எதிரி கலையரசியை தெரியும் என்றும், மற்ற இருவரையும் என்றும், எதிரி கலையரசி வீட்டில் வாடகைக்கு குடியிருப்பவர்கள் கருவேப்பிலை சுற்று காணாமல் போயிவிட்டது என்று தன் மகளை கேட்டார்கள் என்றும் என் மகள் பிடுக்கவில்லை என்று சொன்னது என்றும், மறுநாளும் வந்து தன் மகளிடம் கேட்டார்கள் என்றும், இந்த சம்பவம் சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு நடந்தது என்றும், மறுநாள் தன் மகளிடம் எதிரி கலையரசி வந்து நீ தான் பிடுங்கிகொண்டு போய்விட்டார் என்று ஏசினார் என்றும், தான் பறிக்கவில்லை என்று கூறிவிட்டு தன் மகள் போய்விட்டார் என்றும், இவ்வாறாக 2 முறை சண்டை செய்துகொண்டார்கள் என்றும், அதன் பிறகு 2 நாட்கள் கழித்து என் மனைவி எதிரி கலையரசி வீட்டருகே உள்ள குழாயில் தண்ணீரபிடிப்பதற்காகபோனார் என்றும், எதிரி வாய்தகராறு செய்தார் என்றும், கருவேற்பிலை கன்றை பிடுங்கி சென்ற தேவடியாகள் சொல்லமாட்டீர்கள் என்றும், அவனோடு போனவள் இவனோடு போனவள் என்று கொச்சையாக பேசினார்கள் என்றும், இதை என் கணவன் கேட்டபோது எதிரி கலையரசியும், தன் மனைவியும்



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.21 07:50:00 +0530

ஒருருக்கொருவர் தலைமுடியை பிடித்து இழத்து சன்டைபோடுட்டுக்கொண்டார்கள் என்றும், சன்டையை அங்கு உள்ளவர்கள் விலக்கிவிட்டார்கள் நாங்கள் ஆள கூட்டிவந்தது என்ன செய்கிறேன் பார் என்று சொல்லிக்கொள்கிறார் என்றும், அன்று மாலை 6.00 மணிக்கு ஆள் கூட்டிவந்து என்ன செய்கிறேன் பார் என்று சொல்லிச் சென்றார், அன்று மாலை 2,3 எதிரிகள் உட்பட 5 எதிரிகள் மற்றும் 1வது எதிரிகள் எங்கள் வீட்டுக்குள் வந்து அழைத்தார்கள் என்றும், 2,3 எதிரிகள் என்னை வெளியே இழுத்துக்கொண்டுபோனார்கள் என்றும், கட்டைகம்பால் 2,3 எதிரிகள் அடிக்க வந்தார்கள், அதன் பின்னர் 2வது எதிரி கத்தியால் என்னை வெட்ட வந்தார். ஓங்கி வேட்ட வந்தபோது தான் மறித்தார் என்றும், தன் இடது கை ஆள்காட்டி விரல் துண்டாகிவிட்டது என்றும், அதன் பின்னர் என் மனைவி வந்து என்னை அழைக்க வந்தபோது 1வது எதிரி கட்டை கம்பால் என் மனைவியை அடித்து அவருக்கு மண்டை பிளந்துவிட்டது என்றும், தன் மனைவி மயக்கமாகிவிட்டார் என்றும், 3-வது எதிரியும் தன்னை வீட்டிற்குள் இருந்து கட்டிப்பித்து இழுத்துவந்தார் என்றும், தான் அதன் பின்னர் அங்கிருந்து ஓடிவிட்டார்கள் என்றும், தான் அதன் பின்னர் அகதிகள் முகாமில் பாதுகாப்பில் இருந்த மேலூர் காவல் நிலையம் தலைமைக்காவலரிடம் புகார் சொன்னார் என்றும், அவர் அதை எழுதிக் கொண்டு தன்னை மேலூர் காவல்நிலையத்திற்கு அழைத்துவந்தார்கள் என்றும், தான் கெடுத்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும் என்றும், போலீசார் தன்னை மெமோ கொடுத்துமருந்துவமனைக்கு போலீசார் என்னை மெமோ கொடுத்து மருந்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.2)** அ.சா.2 இரத்தினாபேகம் தனது சாட்சியத்தில் தான் திருவாதவூர் சமத்துவபுரத்தில் குடியிருக்கிறார் என்றும், அ.சா.1 தன் கணவர் என்றும், எதிரிகளைத் தெரியும் என்றும், சுமார் ஒரு வருடத்திற்கு முன்பாக எதிரி கலையரசி வீட்டிற்கு முன்பாக எள்ள குழாயில் தான் பிடிக்கபோனேன் என்றும், அப்போது என் மகள் கருவேப்பிலை கன்றை பிடிங்கவில்லை என்று சொல்லிவிட்டார் என்றும், தான் போகும்போதும், வரும்போதும் ஜாடையாக பேசி அடிக்கும் அளவிற்கு மறுநாளே வந்துவிட்டது என்றும், அன்று மாலை 4.00 மணி அளவிற்கு முதல் நாலும் எதிரி கலையரசியும் சண்டைபோட்டோம். அங்கு இருந்தவர்கள் விலக்கிவிட்டார்கள் என்றும், வாய் வித்தியாசமாக எதிரி கலையரசி பேசினார் என்றும், புருசனை வரச்சொல்கிறேன். உங்கள் வீட்டிற்குள் உட்கார்ந்து இருந்தோம். அங்கு இருந்தவர்கள் விலக்கிவிட்டார்கள் என்றும், வாய் வித்தியாசமாக எதிரி கலையரசி பேசினார் என்றும், புருசனை வரச்சொல்கிறார் என்றும், உங்களை பார்த்துக்கொள்கிறேன் இரு டி என்று சொன்னார் என்றும், நாங்கள் வீட்டிற்க்குள்



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.21 07:50:04 +0530

உட்கார்ந்து இருந்தார்கள் என்றும், அப்போது 4 ஆண்களும் எதிரி கலையரசியும் வந்தார்கள் என்றும், அந்த 4 ஆண்களில் ஆஜர் எதிரிகள் 2,3 ம் இருந்தார்கள், எதிரி கலையரசி கட்டையால் என் மண்டையில் அடித்துவிட்டார் என்றும், தன் கணவரை அடிக்கபோனபோது நான் வில்க்கினேன். 4 பையன்களில் கத்தி வைத்திருநதார்கள் என்றும், யார் யார் வைத்திருந்தது என்று தெரியவில்லை என்றும், தன் கணவரின் இடது தோள்பட்டை இடது முழங்கையிலும் அடித்தார்கள் என்றும், இடது கை ஆள்காட்டி விரலில் வெட்டு பட்டது என்றும், முகாமில் இருந்த மேலூர் காவல்நிலையத்திற்கு தகவல் சொன்னார்கள் என்றும், அவர் தங்களை மேலூர் காவல்நிலையத்திற்கு அழைத்து சென்றார் என்றும், காவல்நிலையத்திற்கு வந்து தன் கணவர் போலீசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.3)** அ.சா.3 சேட் தனது சாட்சியத்தில் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், சுமார் ஒரு வருடத்திற்கு முன்பாக சம்பவம் நடைபெற்றதாக கேள்விபட்டார் என்றும், கலையரசி என்பவர் வெளியூரிலிருந்து 4 ஆட்களை அழைத்து வந்து அ.சா.1, 2-ஐ அடித்ததாக கேள்விபட்டார் என்றும், தான் மருத்துவமனைக்கு சென்று பார்த்தார் என்றும், தான் மருத்துவமனையில் பார்த்தபோது அ.சா.1-க்கு கையில் காயம் இருந்தது என்றும், உடம்பெல்லாம் அடிபட்டு இருந்தது என்றும், அ.சா.2-ஐ மதுரை அரசு மருத்துவமனையில் வைத்து பார்த்தபோது அவருக்கு தலையில் அடிபட்டு இருந்தது என்றும் சாட்சியம் அளித்து பிறழ் சாட்சி ஆகியுள்ளார்.

**4.4)** அ.சா.4 அப்துல் ரஹீம் தனது சாட்சியத்தில் சுமார் ஒரு வருடத்திற்கு முன்னால் போலீசார் இவ்வழக்கு சம்பவ இடத்தை பார்க்க வந்தார்கள் என்றும், இடத்தை பார்த்து எழுதிக்கொண்டார்கள் என்றும், தான் போலீசாரிடம் கையெழுத்து போட்டுக்கொடுத்தார் என்றும், தன்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.2 பார்வை மகஜரில் இருப்பது தன்னுடைய கையெழுத்து தான் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**4.5)** அ.சா.5 ஜோதி தனது சாட்சியத்தில் அ.சா.1 மற்றும் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், சுமார் 2 வருடத்திற்கு முன்பு ஆட்டுகுட்டி விற்பதற்காக அ.சா.1-ன் வீட்டிற்கு போனார் என்றும், அப்போது எதிரி கலையரசிக்கும், அ.சா.1-ன் வீட்டிற்கும் வாய்தகராறு நடந்தது என்றும், அதற்கு பிறகு என்ன நடந்தது என்று தனக்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.21 07:50:08 +0530

**4.6)** அ.சா.6 முர்ஷிதாபேகம் தனது சாட்சியத்தில் கடந்த 25.12.2005-ல் பணியில் இருந்தபோது இரவு பத்தரை மணிக்கு ரத்தினாபேகம் என்பவர் தன்னை தெரிந்த 6 நபர்கள் அன்று மாலை 6 மணியளவில் விறகு கட்டையால் தாக்கியதாக கூறினார் என்றும், அவரை பரிசோதித்தபோது கீழ்கண்ட காயங்கள் இருந்தன என்றும், 1) தலையில் பின்புறத்தில் 1.5x0.5 செ.மீ அளவில் சிதைந்த காயமும், 1x1 செ.மீ அளவில் வீக்க காயமும் இருந்தது என்றும், நாடியில் 1 x 1 செ.மீ அளவில் வீக்கக்காயமும், 3) வலது முழங்கையில் 1x1 செ.மீ அளவில் வீக்க காயமும் இருந்தது என்றும், அவரை உள்நோயாளியாக அனுமதித்து, பின்பு அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார் என்றும், அங்கு அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று அ.சா.ஆ.3 சான்று வழங்கினார் என்றும், அதே நாளில் 11 மணிக்கு நாகூர் என்ற நபர் வந்தார் என்றும், அவருக்கு தெரிந்த 6 நபரால் கத்தியால் தாக்கியதாக கூறினார் என்றும், அவருக்கு ஏற்பட்ட காயங்கள் பின்வருமாறு 1) இடது ஆள் காட்டிவிரலில் நகர் அருகில் 1.5 x 1 x 5 செ.மீ அளவில் வெட்டுக்காயம் என்றும், 2) இடது தோளில் 2 x2 செ.மீ அளவில் தோளில் காயம் இருந்தது என்று அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று அ.சா.ஆ.4 சான்று வழங்கினார் என்றும், அவர்களுக்கு ஏற்பட்ட காயங்கள் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் ஏற்பட வாய்ப்புண்டு என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**4.7)** அ.சா.7 மந்தைச்சாமி தனது சாட்சியத்தில் பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும், வழக்கு சண்டைபற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னிடம் சம்பவ இடத்திற்கு வந்து தன்னிடம் கையெழுத்து கேட்டார்கள் என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்து பிறழ் சாட்சி ஆகியுள்ளார்.

**4.8)** அ.சா.8 சண்முகம் தனது சாட்சியத்தில் கடந்த 30.12.2005-ம் தேதி காலை 10.15 மணிக்கு மேலூர் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது மேலூர் காவல்நிலைய மனு எண்.715/2005 பார்வையிட்டு புகாரின் தன்மைகேற்ப வாதி நாகூர் என்பவர் கொடுத்த புகாரை பெற்று குற்ற எண்.1470/2005, பிரிவு 147, 341, 323 இ.த.ச-ன் கீழ் வழக்கு பதிவு செய்தார் என்றும், அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 என்றும், பின்னர் முதல் தகவல் அறிக்கையுடன் புகாரினை இனைத்து நீதிமன்றத்தில் அனுப்பி வைத்தார் என்றும், அன்றையதினமே பகல் 11.15 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் அப்துல் ரஹீம், மந்தைச்சாமி ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.6 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார் என்றும், பின்னர் சாட்சிகள் நாகூர், ரத்தினபேகம், ஜோதி, சேட்,



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.21 07:50:12 +0530

அப்துல்ரஹீம், மந்தைசாமி, தலைமை காவலர் ஹரிச்சந்திரன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும், இவ்வழக்கில் எதிரிகளை தேடிவந்த நிலையில் அன்றையதினம் 30.12.2005-ம் தேதி பகல் 12.00 மணிக்கு சமத்துவபுரம் பஸ் ஸ்டாண்டில் வைத்து எதிரி கலையரசியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார் என்றும், இவ்வழக்கில் காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மேலூர், அரசு மருத்துவமனை மருத்துவர் முர்சிதா பேகம் என்பவரை விசாரித்து காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும், தனது புலன்விசாரணை முடித்து சாட்சிகளின் வாக்குமூலம் ஆவணங்களிலிருந்து சட்டப்பிரிவுகளான 147, 341, 323 இ.த.ச-விலிருந்து 341, 323 ஆக எதிரிகள் கலையரசி, சண்முகம், அருள் ஆகியோர்களை தவிர மற்ற எதிரிகளை நீக்கி அறிக்கை ஒன்றை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார் என்றும், அந்த சட்ட மாறுதல் மற்றும் எதிரி நீக்கல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இத்துடன் தனது புலன்விசாரணை முடித்து எதிரிகள் மீது 13.02.2006-ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.9)** அ.சா.9 அரிசந்திரன் தனது சாட்சியத்தில் கடந்த 25.12.2005-ம் தேதி இரவு 09.00 மணிக்கு மேலூர் காவல் நிலையத்தில் பொறுப்பில் இருந்த போது திருவாதவூர் சமயத்துவத்தை சேர்ந்த நாகூர் என்பவரும் அவரது மனைவி என்பவரும் உடம்பில் காயத்துடன் காவல் நிலையத்திற்கு வந்து அவர்கள் ஊரை சேர்ந்த சிலர் தங்களை அடித்துவிட்டதாக கூறி புகார் மனு கொடுத்தனர், புகார் மனுவை பெற்று அவர்களை மருத்துவமனைக்கு சொல்ல சொல்லி மருத்துவர் நமூனா 152/2005 கொடுத்தனுப்பினார் என்றும், அவர்கள் கொடுத்த புகாரின் அடிப்படையில் மேலூர் காவல் நிலைய மனு ரசீது எண் 711/2005 கொடுத்த புலன்விசாரணைக்காக புகார் மனுவை சார்பு ஆய்வாளர் திரு.சண்முகம் அவர்களின் பார்வைக்கு வைத்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**5) குற்றவியல் விசாரணை சட்டப்பிரிவு 313(1)(ஆ)-ன் கீழான விசாரணை**

அரசு தரப்பு சாட்சிகள் முடிக்கப்பட்டதற்கு பின்னால் பதிவு செய்யப்பட்ட சாட்சிகளின் விசாரணையிலிருந்து குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு பாதகமாக தோன்றும் சங்கதிகளை குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)-ன் கீழ் குற்றம் சாட்டப்பட்டவர்களிடம் எடுத்துக்கூறி விளக்கி வினவியபோது 2, 3 எதிரிகள் பொய் சாட்சியம் என்று அரசு தரப்பு சாட்சிகளை மறுத்துவிட்டார்கள். மேலும் அவர்கள் தரப்பில் சாட்சிகள் உண்டா என வினவியபோது சாட்சிகள் இல்லை என்று சொன்னார்கள். அதனால் 2, 3 எதிரிகள் தரப்பில் சாட்சிகள் இல்லை என்று சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது.



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.21 07:50:16 +0530

<u>**6)** அரசு தரப்பு வாதம் பின்வருமாறு**:**</u>

அரசு தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தில் அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் 2, 3 எதிரிகள் தான் குற்றம் புரிந்துள்ளார்கள் என்று சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாகவும், 2, 3 எதிரிகள் மீது உள்ள குற்ற முகாந்திரத்தை நிரூபிக்கும் வகையில் அமைந்துள்ளதாகவும், எனவே 2, 3 எதிரிகளுக்கு தக்க தண்டனை வழங்குமாறு எடுத்துரைத்தார்.

<u>**7) 2, 3** எதிரிகள் தரப்பில் வாதம் பின்வருமாறு**:**</u>

2, 3 எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் இவ்வழக்கில் அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் அரசு தரப்பு வழக்கை உறுதிபடுத்தும் வகையில் இல்லை என்றும், எனவே 2, 3 எதிரிகள் மீது உள்ள குற்றம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், சந்தேகத்தின் பலனை 2, 3 எதிரிகளுக்கு வழங்கி எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

<u>**8)** தீர்வு</u> **:-**

இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அனைத்து வழக்காவணங்களும் பரிசீலனை செய்யப்பட்டது.

**9)** அரசு தரப்பு வழக்குப்படி, இவ்வழக்கின் வாதி நாகூர் என்பவரின் மனைவி இரத்தினாபேகம் என்பவர் 1-ம் எதிரியின் வீட்டில் உள்ள கருவேப்பிலையை உருவி விட்டதாக 1-ம் எதிரி வாதியின் மனைவியிடம் தகராறு செய்து வந்து உள்ளார். இந்நிலையில் கடந்த 25.12.2005-ம் தேதி மாலை 6.00 மணியளவில் வாதி நாகூர், அவரது மனைவி இரத்திரூ பேகம் மற்றும் குழந்தைகளுடன் வீட்டுக்கு எதிரே இருந்தபோது எதிரிகள் கையில் கம்புடன் வந்து, 1-ம் எதிரி கம்பால் சாட்சி-2ஐ தலையில் அடித்து தலையின் பின்புறம் சாதாரண காயத்தை ஏற்படுத்தியும், தடுக்கப்போன வாதியை 2, 3 எதிரிகள் மறித்து கம்பால் இடது ஆள் காட்டி விரலில் அடித்து காயத்தை ஏற்படுத்திய குற்றம் என்பது அரசு தரப்பு வழக்காகும்.

**10)** அ.சா.1 நாகூர் தனது சாட்சியத்தில் தான் திருவாதவூர் சமத்துவபுரத்திரல் குடியிருக்கிறேன் என்றும், எதிரி கலையரசியை தெரியும் என்றும், மற்ற இருவரையும் தெரியும் என்றும், எதிரி கலையரசி வீட்டில் வாடகைக்கு குடியிருப்பவர்கள் கருவேப்பிலை சுற்று காணாமல் போயிவிட்டது என்று தன் மகளை கேட்டார்கள் என்றும் என் மகள் பிடுக்கவில்லை என்று சொன்னது என்றும், மறுநாளும் வந்து தன் மகளிடம் கேட்டார்கள் என்றும், இந்த



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.21 07:50:20 +0530

சம்பவம் சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு நடந்தது என்றும், மறுநாள் தன் மகளிடம் எதிரி கலையரசி வந்து நீ தான் பிடுங்கிகொண்டு போய்விட்டார் என்று ஏசினார் என்றும், தான் பறிக்கவில்லை என்று கூறிவிட்டு தன் மகள் போய்விட்டார் என்றும், இவ்வாறாக 2 முறை சண்டை செய்துகொண்டார்கள் என்றும், அதன் பிறகு 2 நாட்கள் கழித்து என் மனைவி எதிரி கலையரசி வீட்டருகே உள்ள குழாயில் தண்ணீர்பிடிப்பதற்காகபோனார் என்றும், எதிரி வாய்தகராறு செய்தார் என்றும், கருவேற்பிலை கன்றை பிடுங்கி சென்ற தேவடியாகள் சொல்லமாட்டீர்கள் என்றும், அவனோடு போனவள் இவனோடு போனவள் என்று கொச்சையாக பேசினார்கள் என்றும், இதை என் கணவன் கேட்டபோது எதிரி கலையரசியும், தன் மனைவியும் ஒருருக்கொருவர் தலைமுடியை பிடித்து இழுத்து சன்டைபோடுட்டுக்கொண்டார்கள் என்றும், சன்டையை அங்கு உள்ளவர்கள் விலக்கிவிட்டார்கள் நாங்கள் ஆள கூட்டிவந்தது என்ன செய்கிறேன் பார் என்று சொல்லிக்கொள்கிறார் என்றும், அன்று மாலை 6.00 மணிக்கு ஆள் கூட்டிவந்து என்ன செய்கிறேன் பார் என்று சொல்லிச் சென்றார், அன்று மாலை 2,3 எதிரிகள் உட்பட 5 எதிரிகள் மற்றும் 1வது எதிரிகள் எங்கள் வீட்டுக்குள் வந்து அழைத்தார்கள் என்றும், 2,3 எதிரிகள் என்னை வெளியே இழுத்துக்கொண்டுபோனார்கள் என்றும், கட்டைகம்பால் 2,3 எதிரிகள் அடிக்க வந்தார்கள், அதன் பின்னர் 2வது எதிரி கத்தியால் என்னை வெட்ட வந்தார். ஓங்கி வேட்ட வந்தபோது தான் மறித்தார் என்றும், தன் இடது கை ஆள்காட்டி விரல் துண்டாகிவிட்டது என்றும், அதன் பின்னர் என் மனைவி வந்து என்னை அழைக்க வந்தபோது 1வது எதிரி கட்டை கம்பால் என் மனைவியை அடித்து அவருக்கு மண்டை பிளந்துவிட்டது என்றும், தன் மனைவி மயக்கமாகிவிட்டார் என்றும், 3-வது எதிரியும் தன்னை வீட்டிற்குள் இருந்து கட்டிப்பித்து இழுத்துவந்தார் என்றும், தான் அதன் பின்னர் அங்கிருந்து ஓடிவிட்டார்கள் என்றும், தான் அதன் பின்னர் அகதிகள் முகாமில் பாதுகாப்பில் இருந்த மேலூர் காவல் நிலையம் தலைமைக்காவலரிடம் புகார் சொன்னார் என்றும், அவர் அதை எழுதிக் கொண்டு தன்னை மேலூர் காவல்நிலையத்திற்கு அழைத்துவந்தார்கள் என்றும், தான் கெடுத்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும் என்றும், போலீசார் தன்னை மெமோ கொடுத்துமருந்துவமனைக்கு போலீசார் என்னை மெமோ கொடுத்து மருந்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**11)** மேலும் அவர் தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் "அதன் பின்னர் 1-வது எதிரி என் மனைவி இடம் அடிக்கடி சத்தம் போடும். அது சம்பந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளோம். 2-வது எதிரி கத்தியால் வெட்ட வந்தார் என்றும், அதனை தடுத்தபோது விரலில் பட்டது என்ற விவரத்தை புகாரிலும் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன்.



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.21 07:50:25 +0530

புகாரில் நான் என்னை 5 பேர் தாக்கியதாக சொல்லி இருக்கிறேன் என்றால் சரிதான். போலீசார் விசாரணையிலும் என்னை 5 பேர் தாக்கியதாகத்தான் கூறினேன்." என்று குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். இவ்வழக்கில் அ.சா.1-ன் சாட்சியத்தின் அடிப்படையில் இவ்வழக்கின் எதிரிகள் அ.சா.1-ன் மனைவியை தாக்கியதாக எந்த சாட்சியமும் அமையவில்லை. எதிரிகள் அ.சா.1-ஐ அடிக்க முயன்றதாக மட்டுமே சாட்சியம் அளித்துள்ளார்.

**12)** அ.சா.2 இரத்தினாபேகம் தனது சாட்சியத்தில் தான் திருவாதவூர் சமத்துவபுரத்தில் குடியிருக்கிறார் என்றும், அ.சா.1 தன் கணவர் என்றும், எதிரிகளைத் தெரியும் என்றும், சுமார் ஒரு வருடத்திற்கு முன்பாக எதிரி கலையரசி வீட்டிற்கு முன்பாக எள்ள குழாயில் தான் பிடிக்கபோனேன் என்றும், அப்போது என் மகள் கருவேப்பிலை கன்றை பிடிங்கவில்லை என்று சொல்லிவிட்டார் என்றும், தான் போகும்போதும், வரும்போதும் ஜாடையாக பேசி அடிக்கும் அளவிற்கு மறுநாளே வந்துவிட்டது என்றும், அன்று மாலை 4.00 மணி அளவிற்கு முதல் நாலும் எதிரி கலையரசியும் சண்டைபோட்டோம். அங்கு இருந்தவர்கள் விலக்கிவிட்டார்கள் என்றும், வாய் வித்தியாசமாக எதிரி கலையரசி பேசினார் என்றும், புருசனை வரச்சொல்கிறேன். உங்கள் வீட்டிற்குள் உட்கார்ந்து இருந்தோம். அங்கு இருந்தவர்கள் விலக்கிவிட்டார்கள் என்றும், வாய் வித்தியாசமாக எதிரி கலையரசி பேசினார் என்றும், புருசனை வரச்சொல்கிறார் என்றும், உங்களை பார்த்துக்கொள்கிறேன் இரு டி என்று சொன்னார் என்றும், நாங்கள் வீட்டிற்க்குள் உட்கார்ந்து இருந்தார்கள் என்றும், அப்போது 4 ஆண்களும் எதிரி கலையரசியும் வந்தார்கள் என்றும், அந்த 4 ஆண்களில் ஆஜர் எதிரிகள் 2,3 ம் இருந்தார்கள், எதிரி கலையரசி கட்டையால் என் மண்டையில் அடித்துவிட்டார் என்றும், தன் கணவரை அடிக்கபோனபோது நான் விலக்கினேன். 4 பையன்களில் கத்தி வைத்திருந்தார்கள் என்றும், யார் யார் வைத்திருந்தது என்று தெரியவில்லை என்றும், தன் கணவரின் இடது தோள்பட்டை இடது முழங்கையிலும் அடித்தார்கள் என்றும், இடது கை ஆள்காட்டி விரலில் வெட்டு பட்டது என்றும், முகாமில் இருந்த மேலூர் காவல்நிலையத்திற்கு தகவல் சொன்னார்கள் என்றும், அவர் தங்களை மேலூர் காவல்நிலையத்திற்கு அழைத்து சென்றார் என்றும், காவல்நிலையத்திற்கு வந்து தன் கணவர் போலீசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**13)** அ.சா.2-ன் சாட்சியத்தில் கலையரசி அவரை தாக்கியதாகவும், இவ்வழக்கின் எதிரிகள் கத்தி வைத்திருந்ததாக மட்டுமே சாட்சியம் அளித்துள்ளார். எதிரிகள் அவரை தாக்கி காயம் ஏற்பட்டதாகவும், எதிரிகள் அ.சா.1-ஐ தடுத்து நிறுத்தியதாகவும் சாட்சியம் அளிக்கவில்லை.



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.21 07:50:29 +0530

**14)** அ.சா.3 சேட் தனது சாட்சியத்தில் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், சுமார் ஒரு வருடத்திற்கு முன்பாக சம்பவம் நடைபெற்றதாக கேள்விபட்டார் என்றும், கலையரசி என்பவர் வெளியூரிலிருந்து 4 ஆட்களை அழைத்து வந்து அ.சா.1, 2-ஐ அடித்ததாக கேள்விபட்டார் என்றும், தான் மருத்துவமனைக்கு சென்று பார்த்தார் என்றும், தான் மருத்துவமனையில் பார்த்தபோது அ.சா.1-க்கு கையில் காயம் இருந்தது என்றும், உடம்பெல்லாம் அடிபட்டு இருந்தது என்றும், அ.சா.2-ஐ மதுரை அரசு மருத்துவமனையில் வைத்து பார்த்தபோது அவருக்கு தலையில் அடிபட்டு இருந்தது என்றும் சாட்சியம் அளித்து பிறழ் சாட்சி ஆகியுள்ளார்.

**15)** அ.சா.4 அப்துல் ரஹீம் தனது சாட்சியத்தில் சுமார் ஒரு வருடத்திற்கு முன்னால் போலீசார் இவ்வழக்கு சம்பவ இடத்தை பார்க்க வந்தார்கள் என்றும், இடத்தை பார்த்து எழுதிக்கொண்டார்கள் என்றும், தான் போலீசாரிடம் கையெழுத்து போட்டுக்கொடுத்தார் என்றும், தன்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.2 பார்வை மகஜரில் இருப்பது தன்னுடைய கையெழுத்து தான் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**16)** அ.சா.5 ஜோதி தனது சாட்சியத்தில் அ.சா.1 மற்றும் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், சுமார் 2 வருடத்திற்கு முன்பு ஆட்டுகுட்டி விற்பதற்காக அ.சா.1-ன் வீட்டிற்கு போனார் என்றும், அப்போது எதிரி கலையரசிக்கும், அ.சா.1-ன் வீட்டிற்கும் வாய்தகராறு நடந்தது என்றும், அதற்கு பிறகு என்ன நடந்தது என்று தனக்கு தெரியாது என்று அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார். அதனால் அவர் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டுள்ளார்.

**17)** அ.சா.6 முர்ஷிதாபேகம் தனது சாட்சியத்தில் கடந்த 25.12.2005-ல் பணியில் இருந்தபோது இரவு பத்தரை மணிக்கு ரத்தினாபேகம் என்பவர் தன்னை தெரிந்த 6 நபர்கள் அன்று மாலை 6 மணியளவில் விறகு கட்டையால் தாக்கியதாக கூறினார் என்றும், அவரை பரிசோதித்தபோது கீழ்கண்ட காயங்கள் இருந்தன என்றும், 1) தலையில் பின்புறத்தில் 1.5x0.5 செ.மீ அளவில் சிதைந்த காயமும், 1x1 செ.மீ அளவில் வீக்க காயமும் இருந்தது என்றும், நாடியில் 1 x 1 செ.மீ அளவில் வீக்கக்காயமும், 3) வலது முழங்கையில் 1x1 செ.மீ அளவில் வீக்க காயமும் இருந்தது என்றும், அவரை உள்நோயாளியாக அனுமதித்து, பின்பு அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார் என்றும், அங்கு அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று அ.சா.ஆ.3 சான்று வழங்கினார் என்றும், அதே நாளில் 11 மணிக்கு நாகூர் என்ற நபர் வந்தார் என்றும், அவருக்கு தெரிந்த 6 நபரால் கத்தியால் தாக்கியதாக கூறினார் என்றும், அவருக்கு ஏற்பட்ட காயங்கள் பின்வருமாறு 1) இடது ஆள்



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.21 07:50:33 +0530

காட்டிவிரலில் நகர் அருகில் 1.5 x 1 x 5 செ.மீ அளவில் வெட்டுக்காயம் என்றும், 2) இடது தோளில் 2 x2 செ.மீ அளவில் தோளில் காயம் இருந்தது என்று அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று அ.சா.ஆ.4 சான்று வழங்கினார் என்றும், அவர்களுக்கு ஏற்பட்ட காயங்கள் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் ஏற்பட வாய்ப்புண்டு என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.6-ன் சாட்சியத்தின் மூலம் அ.சா.1 மற்றும் அ.சா.2-க்கு ஏற்பட்ட காயத்தை குறித்து மட்டுமே சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளது.

**18)** அ.சா.7 மந்தைச்சாமி தனது சாட்சியத்தில் பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும், வழக்கு சண்டைபற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னிடம் சம்பவ இடத்திற்கு வந்து தன்னிடம் கையெழுத்து கேட்டார்கள் என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்து பிறழ் சாட்சி ஆகியுள்ளார்.

**19)** அ.சா.8 சண்முகம் தனது சாட்சியத்தில் கடந்த 30.12.2005-ம் தேதி காலை 10.15 மணிக்கு மேலூர் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது மேலூர் காவல்நிலைய மனு எண்.715/2005 பார்வையிட்டு புகாரின் தன்மைகேற்ப வாதி நாகூர் என்பவர் கொடுத்த புகாரை பெற்று குற்ற எண்.1470/2005, பிரிவு 147, 341, 323 இ.த.ச-ன் கீழ் வழக்கு பதிவு செய்தார் என்றும், அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 என்றும், பின்னர் முதல் தகவல் அறிக்கையுடன் புகாரினை இனைத்து நீதிமன்றத்தில் அனுப்பி வைத்தார் என்றும், அன்றையதினமே பகல் 11.15 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் அப்துல் ரஹீம், மந்தைச்சாமி ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.6 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார் என்றும், பின்னர் சாட்சிகள் நாகூர், ரத்தினபேகம், ஜோதி, சேட், அப்துல்ரஹீம், மந்தைசாமி, தலைமை காவலர் ஹரிச்சந்திரன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும், இவ்வழக்கில் எதிரிகளை தேடிவந்த நிலையில் அன்றையதினம் 30.12.2005-ம் தேதி பகல் 12.00 மணிக்கு சமத்துவபுரம் பஸ் ஸ்டாண்டில் வைத்து எதிரி கலையரசியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார் என்றும், இவ்வழக்கில் காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மேலூர், அரசு மருத்துவமனை மருத்துவர் முர்சிதா பேகம் என்பவரை விசாரித்து காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும், தனது புலன்விசாரணை முடித்து சாட்சிகளின் வாக்குமூலம் ஆவணங்களிலிருந்து சட்டப்பிரிவுகளான 147, 341, 323 இ.த.ச-விலிருந்து 341, 323 ஆக எதிரிகள் கலையரசி, சண்முகம், அருள் ஆகியோர்களை தவிர மற்ற எதிரிகளை நீக்கி அறிக்கை ஒன்றை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார் என்றும், அந்த சட்ட மாறுதல் மற்றும்



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.21 07:50:37 +0530

எதிரி நீக்கல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இத்துடன் தனது புலன்விசாரணை முடித்து எதிரிகள் மீது 13.02.2006-ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார் என்றும் சாட்சியம் அளித்து பிறழ் சாட்சி ஆகியுள்ளார்.

**20)** அ.சா.9 ஹரிசந்திரன் தனது சாட்சியத்தில் கடந்த 25.12.2005-ம் தேதி இரவு 09.00 மணிக்கு மேலூர் காவல் நிலையத்தில் பொறுப்பில் இருந்த போது திருவாதவூர் சமயத்துவத்தை சேர்ந்த நாகூர் என்பவரும் அவரது மனைவி என்பவரும் உடம்பில் காயத்துடன் காவல் நிலையத்திற்கு வந்து அவர்கள் ஊரை சேர்ந்த சிலர் தங்களை அடித்துவிட்டதாக கூறி புகார் மனு கொடுத்தனர், புகார் மனுவை பெற்று அவர்களை மருத்துவமனைக்கு சொல்ல சொல்லி மருத்துவர் நமூனா 152/2005 கொடுத்தனுப்பினார் என்றும், அவர்கள் கொடுத்த புகாரின் அடிப்படையில் மேலூர் காவல் நிலைய மனு ரசீது எண் 711/2005 கொடுத்த புலன்விசாரணைக்காக புகார் மனுவை சார்பு ஆய்வாளர் திரு.சண்முகம் அவர்களின் பார்வைக்கு வைத்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**21)** அ.சா.8 மற்றும் அ.சா.9 ஆகியோர்களின் சாட்சியம் புலன்விசாரணை குறித்து மட்டுமே அமைந்துள்ளது. எதிரிகள் தான் அ.சா.1 மற்றும் அ.சா.2-யும் தாக்கினார்கள் என்று நேரடியாக சாட்சியம் அளிக்கவில்லை.

**22)** இவ்வழக்கில் காயம்பட்ட சாட்சிகள் மற்றும் மற்ற சாட்சிகள் அனைவரும் சம்பவத்தை குறித்து மட்டுமே சாட்சியம் அளித்துள்ளார்களே தவிர எதிரிகள் தான் அ.சா.1-ஐ தடுத்து நிறுத்தி அவரை தாக்கி காயம் ஏற்பட்டதாக சாட்சியம் அளிக்கவில்லை.

**23)** எனவே, இவ்வழக்கில் அரசு தரப்பில் 2, 3 எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்ற முகாந்திரம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே சந்தேகத்தின் பலனை 2, 3 எதிரிகளுக்கு அளித்து அவர்களை விடுதலை செய்வதுதான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்குமென்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**24)** முடிவாக, 2, 3 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 341, 323-ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து 2, 3 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 341, 323-ன் கீழ் குற்றாவாளிகள் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து, குவிமுச பிரிவு 248(1)-ன் கீழ் எதிரியை விடுதலை செய்து, இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

**25)** இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை.



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.21 07:50:43 +0530

**26)** மேலும் எதிரி குவிமுச பிரிவு 437(A)ன் கீழ் எழுதிக்கொடுத்துள்ள பிணைப்பத்திரம் 6 மாதங்கள் முடிவடைந்த பின்பு தானாக ரத்தாகிவிடும்.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு நீதிமன்ற கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் இன்று 2026- ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21-ம் தேதி அவையறிய பகரப்பட்டது.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.21 07:50:47 +0530

நீதித்துறை நடுவர்,
மேலூர்.

<u>இணைப்பு</u>

<u>அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்</u> :-

| வரிசை எண் | விசாரிக்கப்பட்ட தேதி | சாட்சிகளின் பெயர்கள் | விளக்கம்/சாட்சியின் தன்மை |
|---|---|---|---|
| அ.சா.1 | 20.01.2007 | நாகூர் | புகார்தாரர் |
| அ.சா.2 | 20.01.2007 | இரத்தினாபேகம் | காயம்பட்ட சாட்சி |
| அ.சா.3 | 17.12.2007 | சேட் | நேரில் பார்த்த சாட்சி |
| அ.சா.4 | 17.12.2007 | அப்துல்ரஹீம் | பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.5 | 24.01.2008 | ஜோதி | நேரில் பார்த்த சாட்சி |
| அ.சா.6 | 22.05.2008 | முர்சிதாபேகம் | மருத்துவர் |
| அ.சா.7 | 01.01.2010 | மந்தைச்சாமி | பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.8 | 01.06.2026 | சண்முகம் | முதல்நிலை புலன்விசாரணை அதிகாரி |
| அ.சா.9 | 03.07.2026 | அரிச்சந்திரன் | புலன்விசாரணை அதிகாரி |

<u>அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்</u> :-

| வரிசை எண் | நிரூபிக்கப்பட்டது/ சான்றளிக்கப்பட்டது | ஆவணங்களின் விபரங்கள் |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | அ.சா.1 | புகார் வாக்குமூலம் |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.2 | அ.சா.4 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.3 | அ.சா.5 | இரத்தினாபேகம் என்பவரின் காயச்சான்று |
| அ.சா.ஆ.4 | அ.சா.5 | நாகூர் என்பவரின் காயச்சான்று |
| அ.சா.ஆ.5 | அ.சா.8 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.6 | அ.சா.8 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.7 | அ.சா.8 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை மற்றும் எதிரி நீக்கல் அறிக்கை |

<u>அரசு தரப்பு சான்றுப்பொருட்கள்**:-** இல்லை</u>

<u>**2** மற்றும் **3** எதிரிகள் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் **-**இல்லை</u>

<u>குறியீடப்பட்ட சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள்</u>**:** இல்லை

<u>குறிப்பு</u>

1) வழக்கு விசாரணைகாலத்தில், 2 மற்றும் 3 எதிரிகள் நீதிமன்ற பிணையிலிருந்துள்ளார்.
2) எந்தவொரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3) வழக்கின் முடிவு காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது
4) தீர்ப்பின் நகல், மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவருக்கு பணிந்து சமர்ப்பிக்கப்பட்டது.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.21 07:50:52 +0530